**சார்பு நீதிமன்றம், திருவாரூர்**
**முன்னிலை : திரு.C.ராஜேஷ், B.A., B.L.,**
**சார்பு நீதிபதி, திருவாரூர்**

2026–ஆம் ஆண்டு ஜுலை மாதம் 13–ஆம் நாள், திங்கள் கிழமை
(திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீ பராபவ வருடம், ஆனித்திங்கள் 29– ம் நாள்)

**அசல் வழக்கு எண் : 125 / 2021 மற்றும் அசல் வழக்கு எண்.167/2022**
**CNR No : TNTV03-000613-2021**
**CNR No : TNTV03-000592-2022**

**அ.வ.எண்.125/2021**

ராஜேந்திரன் ... வாதி

எதிர்

1. குருமூர்த்தி
2. ராஜிவ்காந்தி ... பிரதிவாதிகள்

**அ.வ.எண்.167/2022**

கு.ராஜீவ்காந்தி அவரது பொது அதிகார முகவர்
ஆர்.குருமூர்த்தி ... வாதி

எதிர்

1. மாவட்ட ஆட்சியர், திருவாரூர்
2. வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், மன்னார்குடி
3. வட்டாட்சியர் அவர்கள், கூத்தாநல்லூர்
4. ராஜேந்திரன் ... பிரதிவாதிகள்

இவ்வழக்குகள் இரண்டும் கடந்த 15.06.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்ததில் அ.வ.எண்.125/2021–ல் வாதி மற்றும் அ.வ.எண்.167/2022–ல் 4ஆம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு.T.P.S.மணிக்கண்ணன் M.Com., B.L.,** அவர்கள் ஆஜராகியும், அ.வ.எண்.125/2021–ல் பிரதிவாதிகள் மற்றும் அ.வ.எண்.167/2022–ல் வாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு.R.கோவிக்கண்ணன் B.A., B.L.,** அவர்கள் ஆஜராகியும்,

அ.வ.எண்.167/2022–ல் 1 முதல் 3 பிரதிவாதிகள் தோன்றாதரப்பினராக கொண்டும், இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்..

## பொதுவான தீர்ப்புரை

**அ.வ.எண்.125/2021**

தாவா அ மற்றும் ஆ பட்டியல் சொத்துக்கள் வாதிக்கு சொந்தமானவை என்று விளம்புகை செய்து உத்தரவிட்டும், அதனுடன் இணைந்த பரிகாரமாக ஆ பட்டியல் சொத்தை வாதி வசம் ஒப்படைக்க வசப்பரிகாரம் வழங்கியும், ஆ பட்டியல் சொத்தை 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு 03.02.2015–ல் ஆவண எண்.105/2015–ல் எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் செல்லக்கூடியதல்ல வாதியை கட்டுப்படுத்தக்கூடியதல்ல என்று விளம்புகை செய்து உத்தரவிட வேண்டியும், வழக்கின் செலவுத்தொகையை பிரதிவாதிகள் வாதிக்கு கொடுக்க வேண்டியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**அ.வ.எண்.167/2022**

தாவா சொத்து வாதிக்கு சொந்தமானது என்று விளம்புகை செய்ய வேண்டியும், அதன் தொடர்ச்சியாக தாவா சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்தை 4ஆம் பிரதிவாதியோ, அவர்களது ஆட்களோ, அவர்களது முகவர்களோ தடை செய்யக்கூடாது என பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிட வேண்டியும், வழக்கின் செலவுத்தொகையை பிரதிவாதிகள் வாதிக்கு கொடுக்க வேண்டியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**அ.வ.எண்.125/2021ன் வழக்குரையின் சுருக்கம் :-**

1. தாவா சொத்தான திருவிடவாசல் கிராம பழைய புல எண்.13/24—க்கு புதிய புல எண்கள்.104/7 மற்றும் 104/8 கூடுதல் 10 சென்ட் நிலம் இளஞ்சியத்தம்மாளுக்கு பாத்தியப்பட்டு திருவாரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண்.158/1946—ல் 01.04.1947—ம் தேதி இளஞ்சியத்தம்மாளுக்கு ஆதரவாக தீர்ப்பு செய்யப்பட்டது. அந்த சொத்தை பொறுத்து வாதியின் தாயாரான பட்டம்மாளுக்கு 06.08.1950—ம் தேதி இளஞ்சியத்தம்மாள் ஒரு இனாம் செட்டில்மெண்ட் எழுதி வைத்து 07.08.1950—ல் கூத்தாநல்லூர் சார்பதிவகத்தின் ஆவண எண்.796/1950 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சொத்தை பொறுத்து வாதி ராஜேந்திரன் பெயருக்கு 20.02.1991—ல் பட்டம்மாளால் உயில் ஆவணம் எழுதி வைக்கப்பட்டு 21.02.1991—ல் கூத்தாநல்லூர் சார்பதிவகத்தின் ஆவண எண்.3/1991 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. பட்டம்மாள் 02.12.1991—ல் இறந்த பிறகு உயில் நடைமுறைக்கு வந்ததன் அடிப்படையில் தாவா சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டதாகும்.

2. வாதி ராஜேந்திரன் தமிழ்நாடு காவல்துறையில் 1971—ல் காவலராக பணியில் சேர்ந்து திருநெல்வேலி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் பணியாற்றி வந்தார். அந்த சமயம் ஓட்டு வீட்டின் மேல்புறத்தில் 1ம் பிரதிவாதிக்கு உறவு முறையை கருத்தில் கொண்டு குடியிருக்க அனுமதி கொடுத்தார். 1997—ல் நத்தம் நிலவரித்திட்ட அளவையின் போது புல எண்.13/24ல் 10 செண்டில் குருமூர்த்தி பெயருக்கு 61 சதுர மீட்டர் இடத்தையும் வாதி பெயருக்கு 58 சதுர மீட்டர் இடத்தையும் மீதமுள்ள 7 சென்டை ஆயியாரம்மன் கோவில் என்றும் பட்டா மாற்றம் செய்து

விட்டனர். அந்த விவரம் அப்போது வாதிக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி மற்றும் ஆயியாரம்மன் கோவில் பெயரில் ஏற்பட்ட பட்டா மாற்றத்தை ரத்து செய்யக்கோரி திருவாரூர் வருவாய் கோட்டாட்சியரிடம் வாதி மனு தாக்கல் செய்துள்ளார். மேலும் வாதியின் நலனுக்கு விரோதமாக செயல்பட்டதால் 1ம் பிரதிவாதிக்கு வழங்கிய அனுமதியை ரத்து செய்து விட்டார். வாதி தாக்கல் செய்த மேல்முறையீடானது நி.மு.961/2014 ஆ4–19.4.2017 தேதியிட்ட உத்தரவின் படி புல எண்.104/7–ல் 0.00.61 ஏர்ஸ்க்கு 1ம் பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்ட பட்டா ரத்து செய்யப்பட்டு விட்டது.

3. மேற்படி உத்தரவை எதிர்த்து 1ம் பிரதிவாதியால் திருவாரூர் மாவட்ட வருவாய் அலுவலரிடம் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில் ந.க.5489/2017/ஆ1 நாள்.18.02.2021–ல் இறுதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் படி புல எண்.13/24ல் 10 செண்ட் பரப்பிற்கு ஆவணங்களின் அடிப்படையில் நத்தம் நிலவரித்திட்ட உட்பிரிவுகளில் 104/7 மற்றும் 104/8–ல் 10 செண்டிற்கு வாதி பெயருக்கு பட்டா மாறுதல் செய்ய உத்தரவிடப்பட்டது. மேற்படி உத்தரவை எதிர்த்து 1ம் பிரதிவாதியால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிபேராணை மனு எண்.12564/2021–ல் உரிமையியல் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு அறிவுறுத்தி 11.06.2021–ல் மனு முடிக்கப்பட்டது. நத்தம் நிலவரித்திட்ட புல எண்.104/7 மற்றும் 104/8 மொத்தம் 10 செண்ட் நிலம் மற்றும் அதிலுள்ள ஓட்டு வீடு வாதிக்கு பாத்தியப்பட்டது. அதில் பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை.

4. தாவா ஆ பட்டியல் சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதியால் 2ம் பிரதிவாதிக்கு கடந்த 03.02.2015–ல் கூத்தாநல்லூர் சார்பதிவக ஆவண எண்.105/2015 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள ஆவணத்தை ரத்து செய்யக்கோரி 10.10.2021–ம் தேதி பிரதிவாதிகளுக்கு வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். அதை 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டார். 2ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பி விட்டார். பிரதிவாதிகள் நாளது வரை வாதிக்கு சொந்தமான சொத்தை வசம் ஒப்படைக்கவும் இல்லை, பதிலறிவிப்பும் கொடுக்கவில்லை. வாதிக்கு தெரியாமல் மோசடியாக பெற்ற மேற்படி பட்டாவின் அடிப்படையில் 2ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரம் செல்லக்கூடியதல்ல. எனவே விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>1ஆம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 2ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :-</u>**

**5.** வாதியின் வழக்கு நிலைக்கக்கூடியதல்ல. தாவா ஆ பட்டியல் சொத்தானது கடந்த **02.06.1997–**ம் தேதி **1**ம் பிரதிவாதி பெயருக்கு நத்தம் பட்டா வழங்கப்பட்டு அவரால் அனுபவம் செய்து வரப்பட்டு **03.02.2015–**ம் தேதி அவரது மகனான **2**ம் பிரதிவாதி பெயருக்கு பதிவு செட்டில்மெண்ட் எழுதி வைக்கப்பட்டுள்ளது. ஆ பட்டியல் சொத்தில் **1**ம் பிரதிவாதி ஏற்கனவே வீடு கட்டி ஊராட்சிக்கு வரி செலுத்தி வரப்படுகிறது. **31.08.2015–**ம் தேதி **2**ம் பிரதிவாதி பெயருக்கு மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து குறித்து பிரதிவாதிகளால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நீதிபேராணை மனு

எண்.12564/2021–ல் உரிய நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ள உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தாவா ஆ பட்டியல் சொத்தில் 20.10.2021–ம் தேதி 2ம் பிரதிவாதி மராமத்து பணி செய்து கொண்டிருந்த போது அவரது அனுபவத்தை தடை செய்து சொத்தை ஆக்கிரமிக்க வாதி முயற்சி செய்தார். அவரது முயற்சியை தடுத்து விட்டு உரிமை விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் 2ம் பிரதிவாதியால் அ.வ.எண்.20/2022 என வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கை இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. வாதி தூய்மையான கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை. எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>அ.வ.எண்.167/2022–ன் வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்:–</u>

6. தாவா சொத்தை பொறுத்து வாதியின் தகப்பனார் குருமூர்த்தி பெயருக்கு 02.06.1997-ல் நத்தம் நிலவரித்திட்ட பட்டா வழங்கப்பட்டு அவரது அனுபவத்தில் இருந்து வந்து 03.02.2015-ம் தேதி வாதி பெயருக்கு கூத்தாநல்லூர் சார்பதிவக ஆவண எண்.105/2015 என செட்டில்மெண்ட் எழுதி வைத்து வாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது. தாவா சொத்தில் வாதியின் தகப்பனார் வீடு கட்டி ஊராட்சிக்கு வரி செலுத்தி வரப்படுகிறது. 31.08.2015-ம் தேதி வாதியின் பெயருக்கு மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. குடவாசல் வட்டாட்சியரால் 04.03.2015-ம் தேதி தொ.மு.எண்.502/2015-ல் வாதி பெயருக்கு பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த 20.10.2021-ம்தேதி தாவா சொத்தில் வாதி மராமத்து பணி செய்து கொண்டிருந்த போது அங்கு வந்த 4ம்

பிரதிவாதி வாதியின் அனுபவத்தை தடை செய்ய முயற்சி செய்தார். அதை வாதி தடுத்து விட்டார். வழக்கு சொத்து குறித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதி பேராணை மனு எண்.12564/2021 என மனு தாக்கல் செய்து உரிமையியல் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ள உத்தரவிடப்பட்டது. ஆகையால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>4ஆம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம் :-</u>**

7. தாவா சொத்தான திருவிடவாசல் கிராம பழைய புல எண்.13/24–க்கு புதிய புல எண்கள்.104/7 மற்றும் 104/8 கூடுதல் 10 செண்ட் நிலம் இளஞ்சியத்தம்மாளுக்கு பாத்தியப்பட்டு திருவாரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண்.158/1946–ல் 01.04.1947–ம் தேதி இளஞ்சியத்தம்மாளுக்கு ஆதரவாக தீர்ப்பு செய்யப்பட்டது. அந்த சொத்தை பொறுத்து 4 ஆம் பிரதிவாதியின் தாயாரான பட்டம்மாளுக்கு 06.08.1950–ம் தேதி இளஞ்சியத்தம்மாள் ஒரு இனாம் செட்டில்மெண்ட் எழுதி வைத்து 07.08.1950–ல் கூத்தாநல்லூர் சார்பதிவகத்தின் ஆவண எண்.796/1950 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சொத்தை பொறுத்து 4 ஆம் பிரதிவாதி ராஜேந்திரன் பெயருக்கு 20.02.1991–ல் பட்டம்மாளால் உயில் ஆவணம் எழுதி வைக்கப்பட்டு 21.02.1991–ல் கூத்தாநல்லூர் சார்பதிவகத்தின் ஆவண எண்.3/1991 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. பட்டம்மாள் 02.12.1991–ல் இறந்த பிறகு உயில் நடைமுறைக்கு வந்ததன் அடிப்படையில் தாவா சொத்துக்கள் 4ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதாகும்.

8. 4ஆம் பிரதிவாதி ராஜேந்திரன் தமிழ்நாடு காவல்துறையில் 1971–ல் காவலராக பணியில் சேர்ந்து திருநெல்வேலி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் பணியாற்றி வந்தார். அந்த சமயம் ஓட்டு வீட்டின் மேல்புறத்தில் வாதியின் தகப்பனாருக்கு உறவு முறையை கருத்தில் கொண்டு குடியிருக்க அனுமதி கொடுத்தார். 1997–ல் நத்தம் நிலவரித்திட்ட அளவையின் போது புல எண்.13/24ல் 10 செண்டில் குருமூர்த்தி பெயருக்கு 61 சதுர மீட்டர் இடத்தையும் 4 ஆம் பிரதிவாதி பெயருக்கு 58 சதுர மீட்டர் இடத்தையும் மீதமுள்ள 7 செண்டை ஆயியாரம்மன் கோவில் என்றும் பட்டா மாற்றம் செய்து விட்டனர். அந்த விவரம் அப்போது 4ஆம் பிரதிவாதிக்கு தெரியாது. குருமூர்த்தி மற்றும் ஆயியாரம்மன் கோவில் பெயரில் ஏற்பட்ட பட்டா மாற்றத்தை ரத்து செய்யக்கோரி திருவாரூர் வருவாய் கோட்டாட்சியரிடம் 4ஆம் பிரதிவாதி மனு தாக்கல் செய்துள்ளார். மேலும் 4ஆம் பிரதிவாதியின் நலனுக்கு விரோதமாக செயல்பட்டதால் குருமூர்த்திக்கு வழங்கிய அனுமதியை ரத்து செய்து விட்டார். 4ஆம் பிரதிவாதி தாக்கல் செய்த மேல்முறையீடானது நி.மு.961/2014 ஆ4–19.4.2017 தேதியிட்ட உத்தரவின் படி புல எண்.104/7–ல் 0.00.61 ஏர்ஸ்க்கு குருமூர்த்தி பெயரில் வழங்கப்பட்ட பட்டா ரத்து செய்யப்பட்டு விட்டது.

9. மேற்படி உத்தரவை எதிர்த்து குருமூர்த்தியால் திருவாரூர் மாவட்ட வருவாய் அலுவலரிடம் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில் ந.க.5489/2017/ஆ1 நாள்.18.02.2021–ல் இறுதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் படி புல எண்.13/24ல் 10 செண்ட் பரப்பிற்கு ஆவணங்களின் அடிப்படையில் நத்தம் நிலவரித்திட்ட உட்பிரிவுகளில்

104/7 மற்றும் 104/8–ல் 10 செண்டிற்கு 4 ஆம் பிரதிவாதி பெயருக்கு பட்டா மாறுதல் செய்ய உத்தரவிடப்பட்டது. மேற்படி உத்தரவை எதிர்த்து குருமூர்த்தியால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிபேராணை மனு எண்.12564/2021–ல் உரிமையியல் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு அறிவுறுத்தி 11.06.2021–ல் மனு முடிக்கப்பட்டது. நத்தம் நிலவரித்திட்ட புல எண்.104/7 மற்றும் 104/8 மொத்தம் 10 செண்ட் நிலம் மற்றும் அதிலுள்ள ஓட்டு வீடு 4 ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது. அதில் குருமூர்த்திக்கோ அவரது மகனுக்கோ எவ்வித உரிமையும் இல்லை.

10. தாவா ஆ பட்டியல் சொத்தை பொறுத்து குருமூர்த்தியால் வாதிக்கு கடந்த 03.02.2015–ல் கூத்தாநல்லூர் சார்பதிவக ஆவண எண்.105/2015 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள ஆவணத்தை ரத்து செய்யக்கோரி 10.10.2021–ம் தேதி 4ஆம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். அதை குருமூர்த்தி பெற்றுக்கொண்டார். ராஜீவ்காந்தி பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பி விட்டார். வாதியும் அவரது தகப்பனாரும் நாளது வரை 4ஆம் பிரதிவாதிக்கு சொந்தமான சொத்தை வசம் ஒப்படைக்கவும் இல்லை, பதிலறிவிப்பும் கொடுக்கவில்லை. 4ஆம் பிரதிவாதிக்கு தெரியாமல் மோசடியாக பெற்ற மேற்படி பட்டாவின் அடிப்படையில் வாதிக்கு குருமூர்த்தி எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரம் செல்லக்கூடியதல்ல. எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**11. அ.வ.எண்.125/2021–ன் வழக்குரை, எதிர்வழக்குரை அடிப்படையில் கீழ்கண்ட எழுவினாக்கள் தீர்வுக்காக வனையப்பட்டன;-**

| | |
|---|---|
| 1. | தாவா சொத்திற்கு உரிமையாளர் என்று வாதி கூறுவது உண்மையா? |
| 2. | வாதி கோரியபடி விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா? |
| 3. | 03.02.2015–ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் செல்லக்கூடியதல்ல என வாதி கோரிய விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா? |
| 4. | வாதிக்கு கிடைக்கும் வேறு பரிகாரங்கள் என்ன? |

**12. அ.வ.எண்.167/2022–ன் வழக்குரை, எதிர்வழக்குரை அடிப்படையில் கீழ்கண்ட எழுவினாக்கள் தீர்வுக்காக வனையப்பட்டன;-**

| | |
|---|---|
| 1. | தாவா சொத்திற்கு உரிமையாளர் என்று வாதி கூறுவது உண்மையா? |
| 2. | வாதி கோரியபடி 4ம் பிரதிவாதிக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா? |
| 3. | வாதிக்கு கிடைக்கும் வேறு பரிகாரங்கள் என்ன? |

13. அ.வ.எண்.125/2021 மற்றும் அ.வ.எண்.167/2022 ஆகியவை ஒன்றாக இணைத்து நடத்தப்பட்டு அ.வ.எண்.125/2021–ல் சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வாதி தரப்பில் வாதி ராஜேந்திரன் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.20 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

அன்புமணி என்பவர் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு அவர் மூலம் ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை. 1 ஆம் பிரதிவாதி குருமூர்த்தி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.13 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சண்முகம், குணசேகரன், பாலமுருகன் ஆகியோர்கள் பி.வா.சா.2, 3, 4 ஆக விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

**அ.வ.எண்.125/2021 –ல் எழுவினா எண்கள்: 1 மற்றும் 2 :-**

**அ.வ.எண்.167/2022 –ல் எழுவினா எண்கள்: 1 மற்றும் 2 :-**

**14.** தாவா சொத்தான சர்வே எண்.104/7 மற்றும் 104/8–ல் 10 சென்டை பொறுத்து வாதியின் தாயாரான பட்டம்மாளின் சகோதரி இளஞ்சியத்துக்கு பாத்தியப்பட்டது என 01.04.1947–ல் திருவாரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தால் அ.வ.எண்.158/1946–ல் விளம்புகை செய்யப்பட்டு பின்னர் 06.08.1950–ல் பட்டம்மாள் பெயருக்கு இனாம் செட்டில்மெண்ட் எழுதி கொடுக்கப்பட்டு அதனை தொடர்ந்து வாதி ராஜேந்திரன் பெயருக்கு அவரது தாயாரான பட்டம்மாளால் 20.02.1991–ல் உயில் எழுதி வைக்கப்பட்டு அந்த உயிலின் அடிப்படையில் தாவா சொத்து வாதி ராஜேந்திரனுக்கு பாத்தியப்பட்டது என்றும் தாவா சொத்தின் மேல் பகுதியில் 1ம் பிரதிவாதி குருமூர்த்தியை அனுமதியின் பெயரில் குடியிருக்க அனுமதித்ததாகவும் ஆனால் தனது மகனான 2ம் பிரதிவாதி ராஜீவ்காந்தி பெயருக்கு 03.02.2015–ம் தேதி மோசடியாக செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளதாக வாதி ராஜேந்திரன் தரப்பில் கூறப்பட்டது.

15. தாவா ஆ பட்டியல் சொத்தான சர்வே எண்.104/7, 61 சதுர மீட்டர் நிலமானது 1ம் பிரதிவாதி குருமூர்த்திக்கு நத்தம் நிலவரித்திட்டத்தின் மூலம் பாத்தியப்பட்டு 03.02.2015-ம் தேதி 2ம் பிரதிவாதி ராஜீவ்காந்திக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்ததாக பிரதிவாதிகள் தரப்பில் கூறப்பட்டது. தாவா சர்வே எண்.13/24 சொத்தை பொறுத்து 06.08.1950ம் தேதி பட்டம்மாளுக்கு அவரது சகோதரியான இளஞ்சியம் வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார். அந்த சொத்தில் உள்ள வீட்டிற்கு பட்டம்மாள் பெயரில் செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீது வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பட்டம்மாள் 02.12.1991-ம் தேதி குடவாசல் தாலுக்கா, ஆயியாரம்மன் கோவில் தெருவில் வசித்து வந்த கனகசபை மனைவியான பட்டம்மாள் இறந்து விட்டதாக வா.சா.ஆ.4 இறப்புச்சான்று வழங்கப்பட்டுள்ளது. சர்வே எண்.13/24-ல் 10 சென்டை பொறுத்து 20.02.1991-ம் தேதி வாதி ராஜேந்திரன் பெயருக்கு பட்டம்மாளால் வா.சா.ஆ.5 உயில் எழுதி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி உயிலை நிரூபணம் செய்யும் விதமாக அதில் 2வது சாட்சியாக கையெழுத்து செய்துள்ள சிவப்பிரகாசம்பிள்ளை மகன் அன்புமணி என்பவர் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். பொதுவாக உயிலின் அடிப்படையில் உரிமை கோரும் போது அதில் கண்ட சாட்சிகளில்

1சாட்சியை மட்டுமாவது விசாரித்து நிரூபணம் செய்ய வேண்டுமென்று பாரதிய சாட்சிய அதினியம் பிரிவு 67–ல் கூறப்பட்டுள்ளது.

**67. Proof of execution of document required by law to be attested.**
If a document is required by law to be attested, it shall not be used as evidence until one attesting witness at least has been called for the purpose of proving its execution, if there be an attesting witness alive, and subject to the process of the Court and capable of giving evidence:

Provided that it shall not be necessary to call an attesting witness in proof of the execution of any document, not being a will, which has been registered in accordance with the provisions of the Indian Registration Act, 1908, (16 of 1908) unless its execution by the person by whom it purports to have been executed is specifically denied.

இவ்வழக்கிலும் வா.சா.ஆ.5 உயிலை நிரூபணம் செய்யும் விதமாக அதில் 2வது சாட்சியான அன்பு மணி வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். எனவே, வா.சா.ஆ.5 உயில் சாட்சியை விசாரித்து உயிலை வாதி ராஜேந்திரன் நிரூபணம் செய்துள்ளார்.

16. வா.சா.ஆ.5 உயிலின் அடிப்படையில் தாவா சொத்து முழுவதும் வாதி ராஜேந்திரனுக்கு பாத்தியப்பட்டது என கூறப்பட்டுள்ள நிலையில் தாவா ஆ பட்டியல் சொத்தான சர்வே எண்.104/7 விஸ்தீரணம் 61 சதுர மீட்டருக்கு 1ம் பிரதிவாதி குருமூர்த்தி பெயரில் பி.வா.சா.ஆ.2 மனைவரி தோராய பட்டா வழங்கப்பட்டுள்ளது. அதை அடிப்படையாக கொண்டு 03.02.2015–ம் தேதி 2ம் பிரதிவாதி ராஜீவ்காந்தி பெயருக்கு பி.வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட்

ஆவணம் எழுதி வைக்கப்பட்டுள்ளது. அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் 04.03.2015—ம் தேதி 2ம் பிரதிவாதி ராஜீவ்காந்தி பெயருக்கு பி.வா.சா.ஆ.3 பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.4 சிட்டா வழங்கப்பட்டுள்ளது. 1, 2 பிரதிவாதிகளான குருமூர்த்தி மற்றும் ராஜீவ்காந்தி பெயரிலுள்ள மின் கட்டண மற்றும் வீட்டு வரி ரசீதுகள் முறையே பி.வா.சா.ஆ.5 மற்றும் பி.வா.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

17. குருமூர்த்தி பெயரிலிருந்த மின் இணைப்பை 2ம் பிரதிவாதி ராஜீவ்காந்தி பெயருக்கு மாற்றி பி.வா.சா.ஆ.7 உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது 2ம் பிரதிவாதி ராஜீவ்காந்தி பெயரிலுள்ள வீட்டு வரி ரசீதுகள் பி.வா.சா.ஆ.12 ஆகவும் மின் கட்டண ரசீதுகள் பி.வா.சா.ஆ.13 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அதன் படி பார்க்கையில் பி.வா.சா.ஆ.2 மனைவரி தோராயப்பட்டாவின் அடிப்படையில் 1, 2 பிரதிவாதிகளான குருமூர்த்தி மற்றும் ராஜீவ்காந்தி ஆகியோர் தாவா ஆ பட்டியல் சொத்தில் உரிமை கோருகிறார்கள் என்பது தெளிவாக தெரிய வருகின்றது. தற்போது தீர்மானிக்கப்பட வேண்டியது வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.5ன் அடிப்படையில் தாவா சொத்துக்களில் வாதி ராஜேந்திரனுக்கு உரிமை மூலம் உள்ளதா அல்லது 2ம் பிரதிவாதி ராஜீவ்காந்திக்கு உரிமைமூலம் உள்ளதா என்பதேயாகும். வாதி ராஜேந்திரனால் தாவா ஆ பட்டியல் சொத்து 1ம் பிரதிவாதி குருமூர்த்திக்கு பி.வா.சா.ஆ.11 சமரச ஒப்பந்த ஆவணம் மூலம் விட்டு கொடுக்கப்பட்டதாக பிரதிவாதிகள் தரப்பில் கூறப்பட்டது. ஆனால் அதில் உள்ள கையெழுத்து தன்னுடையதல்ல என வாதி மறுத்து கூறியுள்ளார். மேலும் அந்த ஆவணம் பதிவு செய்யப்படாத

மற்றும் முத்திரைதீர்வை செலுத்தப்படாத ஆவணமாகும். ஆகையால் பி.வா.சா.ஆ.11 ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணமல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

18. சர்வே எண்.104/7 1ம் பிரதிவாதி குருமூர்த்தி பெயருக்கு வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்து வாதி ராஜேந்திரன் பெயருக்கு பட்டா வழங்க கோரி திருவாரூர் வருவாய் கோட்டாட்சியரிடம் வாதி ராஜேந்திரன் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவின் பேரில் 19.04.2017–ம் தேதி வருவாய் கோட்டாட்சியரால் வா.சா.ஆ.12 உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதில் புல எண்.104/7–ல் 0.00.61 ஏர்ஸ்க்கு குருமூர்த்தி பெயரில் தவறுதலாக வழங்கப்பட்டுள்ள பட்டாவை ரத்து செய்தும் புல எண்.104/8–ல் 0.00.58 ஏர்ஸ்க்கு ராஜேந்திரன் பெயரில் வழங்கப்பட்ட பட்டாவை உறுதி செய்தும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பழைய புல எண்.134/24–ல் 10 சென்ட் நிலத்தை பொறுத்து ராஜேந்திரன் தனியாக மனு அளித்து பரிகாரம் தேடி கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவின் அடிப்படையில் 18.08.2017–ம் தேதி வாதி ராஜேந்திரன் பெயருக்கு வா.சா.ஆ.13 பட்டா மாறுதல் உத்தரவு ஏற்பட்டுள்ளது. அதற்கான சிட்டா வா.சா.ஆ.14 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

19. வா.சா.ஆ.13 வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவை எதிர்த்து 1ம் பிரதிவாதி குருமூர்த்தியால் திருவாரூர் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு செய்யப்பட்டு அதில் 18.02.2021ம் தேதி வா.சா.ஆ.15 உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த உத்தரவில் சர்வே எண்கள்.104/7 மற்றும் 104/8–ல் 10 சென்ட் முழுவதற்கும் வாதி ராஜேந்திரன் பெயரில்

பட்டா மாறுதல் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவை எதிர்த்து 1, 2 பிரதிவாதிகளான குருமூர்த்தி மற்றும் ராஜீவ்காந்தி ஆகியோர் மாண்பமை உயர்நீதிமன்றத்தில் நீதி பேராணை மனு எண்.12564/2021 என மனு தாக்கல் செய்து 11.06.2021–ம் தேதி வா.சா.ஆ.16 உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதில் தரப்பினர்கள் தாவா சொத்து குறித்த உரிமை மூலத்தை உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து தீர்மானித்து கொள்ளலாம் என கூறப்பட்டுள்ளது.

20. தாவா சொத்துக்களை பொறுத்து வாதி ராஜேந்திரன் தரப்பில் உரிமைமூல ஆவணங்களான செட்டில்மெண்ட் மற்றும் உயில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஆனால் 1, 2 பிரதிவாதிகளான குருமூர்த்தி மற்றும் ராஜீவ்காந்தி தரப்பில் பி.வா.சா.ஆ.2 மனைவரி தோராயப்பட்டா மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன்படி பார்க்கையில் பட்டா உரிமை மூல ஆவணம் ஆகாது என கீழ்கண்ட மேதகு உயர்நீதிமன்ற மற்றும் உச்சநீதிமன்ற தீர்ப்புகளில் கூறப்பட்டுள்ளன. Balwant Singh and another Vs Daulat Singh (D) by LRS and others reported in 1997 (7) SCC 137 என்ற மேதகு உச்சநீதிமன்ற முன்தீர்ப்பில் கீழ்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

| |
|---|
| Mutation entries do not convey or extinguish any title and those entries were relevant only for the purpose of collection of land revenue. |

மேலும் Sankalchan Jayachandbhai patel and ors Vs Vithalbhai Jaychandbhai patel and ors reported in 1996 (6) SCC 433 என்ற மேதகு உச்சநீதிமன்ற முன் தீர்ப்பில் கீழ்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

| |
|---|
| It is settled law that mutation entries are only to enable the state to collect revenue from the person in possession and enjoyment of the property and that the right, title and interest as to the property should be dehors the entries. Entries are only one of the modes of proof of the enjoyment of the property. Mutation entries do not create any title or interest there in. |

மேலும் Guruvammal and another Vs Subbiah Naicker and Others reported in 1999 (3) CTC 650 என்ற மேதகு உயர்நீதிமன்ற முன்தீர்ப்பில் கீழ்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

| |
|---|
| Mutation of a property in the revenue records does not create or extinguish the title nor has it any presumptive value on title. It only enables the person in whose favour mutation is ordered to pay the land revenue in question. |

மேற்கண்ட மேதகு உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற முன் தீர்ப்புகளின் அடிப்படையில் பார்க்கையில் தாவா சொத்துக்களை பொறுத்து வாதி ராஜேந்திரன் தரப்பில் உரிமைமூல ஆவணங்கள் மூலம் உரிமை நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. மாறாக பிரதிவாதிகளான குருமூர்த்தி மற்றும் ராஜீவ்காந்தி தரப்பில் வருவாய் ஆவணங்கள் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேலும் அந்த வருவாய் ஆவணங்களும் முறையே திருவாரூர் வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவு வா.சா.ஆ.12 மற்றும் மாவட்ட வருவாய் அலுவலரின் உத்தரவு வா.சா.ஆ.15 ஆகியவற்றின் மூலம் ரத்து செய்யப்பட்டுள்ளன. எனவே தாவா சொத்துக்கள் வாதி ராஜேந்திரனுக்கு பாத்தியமானவை என்றும் அதில் ஆ பட்டியல் சொத்தின் சுவாதீனம் வாதி ராஜேந்திரனுக்கு கிடைக்க கூடியது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. அ.வ.எண்.167/2022-ல் கண்ட சொத்தை பொறுத்து அதன் வாதி ராஜீவ்காந்தி கோரிய உரிமை விளம்புகை

மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

அவ்வாறே அ.வ.எண்.125/2021 மற்றும் அ.வ.எண்.167/2022 –ல் எழுவினா எண்கள் 1 மற்றும் 2–க்கு தீர்வு காணப்படுகிறது.

**அ.வ.எண்.125/2021–ல் எழுவினா எண்: 3 ன் தீர்வு :–**

21. மேலே கண்ட எழுவினாக்களின் தீர்வின் படி தாவா சொத்துக்கள் வாதி ராஜேந்திரனுக்கு பாத்தியப்பட்டது என தீர்வு காணப்பட்டுள்ளது. ஆகையால் 2ம் பிரதிவாதி ராஜீவ்காந்தி பெயருக்கு 03.02.2015-ம் தேதி 1ம் பிரதிவாதி குருமூர்த்தி எழுதி வைத்த பி.வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணம் செல்லக்கூடியதல்ல மற்றும் வாதியை கட்டுப்படுத்தாது என்ற விளம்புகை பரிகாரம் வாதி ராஜேந்திரனுக்கு கிடைக்கக்கூடியது என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

அவ்வாறே எழுவினா எண்3–க்கு தீர்வு காணப்படுகிறது.

**அ.வ.எண்.125/2021–ன் எழுவினா எண்: 4 :–**

**அ.வ.எண்.167/2022–ன் எழுவினா எண்: 3 :–**

**22.** மேலே கண்ட எழுவினாக்களில் தாவா சொத்துக்கள் வாதி ராஜேந்திரனுக்கு பாத்தியப்பட்டவை என்றும் அதில் வாதி கோரிய படி பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்று தீர்வு காணப்பட்டுள்ளது. எனவே வழக்கில் மேற்கொண்டு வாதிக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்க கூடியதல்ல. வழக்கின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு வழக்கின் செலவுத்தொகையை உபயதரப்பினரே ஏற்றுக்கொள்ள வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

அவ்வாறே இவ்வெழுவினாக்களுக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக:–

அ.வ.எண்.125/2021

**தாவா அ மற்றும் ஆ பட்டியல் சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும், தாவா ஆ பட்டியல் சொத்தின் சுவாதீனத்தை பிரதிவாதிகள் 2 மாதத்திற்குள் வாதி வசம் ஒப்படைக்க உத்தரவிட்டும், 03.02.2015–ம் தேதி 1ம் பிரதிவாதியால் 2ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியதல்ல மற்றும் வாதியை கட்டுப்படுத்தாது என விளம்புகை செய்தும் இவ்வழக்கு செலவுத்தொகையின்றி அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

அ.வ.எண்.167/2022

முடிவாக,

**இவ்வழக்கு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இந்த தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, **2026–ம் ஆண்டு ஜுலை மாதம் 13–ஆம் நாள்** இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

C RAJESH
Digitally signed by C RAJESH
Date: 2026.07.14 17:22:01 +0100

சார்பு நீதிபதி,
திருவாரூர்.

வாதி தரப்பு சாட்சிகள் :

வா.சா.1 – திரு.ராஜேந்திரன் (வாதி)

வா.சா.2 – திரு.அன்புமணி (வா.சா.ஆ.5 உயில் சாட்சி)

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>

| | | | |
|---|---|---|---|
| 01 | வா.சா.ஆ.1 | 06.08.1950 | பட்டம்மாளுக்கு இளஞ்சியத்தம்மாள் எழுதிக் கொடுத்த இனாம் சாசனம் கூத்தாநல்லூர் சார்பதிவக ஆவண எண்.796/1950 – அசல் |
| 02 | வா.சா.ஆ.2 | 17.01.1991 | பட்டம்மாள் பெயரில் உள்ள திருவிடவாசல் ஊராட்சி வழங்கிய வீட்டு வரி ரசீது – அசல் |
| 03 | வா.சா.ஆ.3 | 18.01.2000 | ராஜேந்திரன் பெயரில் உள்ள திருவிடவாசல் ஊராட்சி வழங்கிய வீட்டு வரி ரசீது – அசல் |
| 04 | வா.சா.ஆ.4 | 21.12.1991 | திருவிடவாசல் கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய பட்டம்மாளின் இறப்பு சான்று – அசல் |
| 05 | வா.சா.ஆ.5 | 20.02.1991 | பட்டம்மாள் ராஜேந்திரனுக்கு எழுதிவைத்த உயில் ஆவணம் கூத்தாநல்லூர் சார்பதிவக ஆவண எண்.3/1991, பதிவு தேதி 21.02.1991 – அசல் |
| 06 | வா.சா.ஆ.6 | 02.06.1997 | குடவாசல் நத்தம் நிலவரித்திட்ட பட்டா – அசல் |
| 07 | வா.சா.ஆ.7 | 04.12.2009 | கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய மின் இணைப்பு சான்று – அசல் |
| 08 | வா.சா.ஆ.8 | 13.02.2015 | 01.01.1987 முதல் 12.02.2015 வரை கூத்தாநல்லூர் சார்பதிவகம் வழங்கிய வில்லங்க சான்றிதழ் –சான்றிட்ட நகல் |
| 09 | வா.சா.ஆ.9 | 16.02.2015 | 1950 முதல் 1966 வரையிலான கூத்தாநல்லூர் சார்பதிவகம் வழங்கிய வில்லங்க சான்றிதழ் –சான்றிட்ட நகல் |
| 10 | வா.சா.ஆ.10 | 03.02.2015 | குருமூர்த்தி ராஜீவ்காந்திக்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் –சான்றிட்ட நகல் |
| 11 | வா.சா.ஆ.11 | 13.04.2016 | சர்வே எண்.13/24 பட்டம்மாள் பெயரிலுள்ள 1391 பசலிக்கான குடவாசல் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் – சான்றிட்ட நகல் |
| 12 | வா.சா.ஆ.12 | 19.04.2017 | திருவாரூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் வழங்கிய செயல்முறைகள் கடிதம் – அசல் |
| 13 | வா.சா.ஆ.13 | 18.08.2017 | குடவாசல் மண்டல துணை வட்டாட்சியர் வழங்கிய பட்டா மாறுதல் உத்தரவு – சான்றிட்ட நகல் |
| 14 | வா.சா.ஆ.14 | 01.09.2017 | பட்டா எண்.716க்கு குடவாசல் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் வழங்கிய சிட்டா –சான்றிட்ட நகல் |
| 15 | வா.சா.ஆ.15 | 18.02.2021 | திருவாரூர் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கூடுதல் மாவட்ட நிர்வாக நீதிபதி அவர்களின் செயல்முறைகள் –அசல் |
| 16 | வா.சா.ஆ.16 | 11.06.2021 | W.P.12567/2021, WPIP.13355/2021-ல் சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு –ஆன்லைன் காப்பி |
| 17 | வா.சா.ஆ.17 | 18.09.2021 | தாவா சொத்து குறித்து தமிழ்நாடு அரசு வழிகாட்டு மதிப்பு –கணிணி நகல் |
| 18 | வா.சா.ஆ.18 | 10.10.2021 | வாதி, 1, 2 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு –அலுவலக நகல் |
| 19 | வா.சா.ஆ.19 | 13.10.2021 | 1ம் பிரதிவாதி மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை –அசல் |
| 20 | வா.சா.ஆ.20 | 13.10.2021 | 2ம் பிரதிவாதி மேற்படி அறிவிப்பை பெற மறுத்து திருப்பி அனுப்பிய அஞ்சலக கவர் –அசல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்:</u>**

பி.வா.சா.1 – குருமூர்த்தி (1 ஆம் பிரதிவாதி)

பி.வா.சா.2 – சண்முகம்

பி.வா.சா.3 – குணசேகரன்

பி.வா.சா.4 – பாலமுருகன்

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| | | | |
|---|---|---|---|
| 01 | பி.வா.சா.ஆ.1 | 03.02.2015 | ஆர். குருமூர்த்தி அவர்கள் ஜி. ராஜீவ்காந்திக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் ஆவண எண்.105/2015 சார் பதிவாளர் அலுவலகம், கூத்தாநல்லூர் – சான்றிட்ட நகல் |
| 02 | பி.வா.சா.ஆ.2 | 02.06.1997 | மனைவாரி தோராயப் பட்டா – அசல் |
| 03 | பி.வா.சா.ஆ.3 | 04.03.2015 | பட்டா மாற்ற உத்தரவு நகல் – அசல் |
| 04 | பி.வா.சா.ஆ.4 | 09.03.2017 | சிட்டா பார் பசலி 1426 – உண்மை நகல் |
| 05 | பி.வா.சா.ஆ.5 | -- | மின் கட்டண ரசீது (நெ.20) –அசல் |
| 06 | பி.வா.சா.ஆ.6 | 06.01.2025 | வீட்டு வரி ரசீது (நெ.12) – அசல் |
| 07 | பி.வா.சா.ஆ.7 | 31.06.2015 | மின் இைப்பு பெயர் மாற்ற உத்தரவு – அசல் |
| 08 | பி.வா.சா.ஆ.8 | 06.10.2021 | வழிகாட்டி மதிப்பு மற்றும் சொத்து மதிப்பீடு (தமிழ்நாடு பதிவுத்துறை) – பதிவிறக்க நகல் |
| 09 | பி.வா.சா.ஆ.9 | 24.10.2021 | ஜெனரல் பவர் பத்திரம் - நகல் |
| 10 | பி.வா.சா.ஆ.10 | 19.07.1993 | வாதிக்கும் மற்றும் பிரதிவாதிக்கும் க.சங்கரன் என்பவர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு – நகல் |
| 11 | பி.வா.சா.ஆ.11 | 23.06.1993 | வாதிக்கும் மற்றும் பிரதிவாதிக்கும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் |

| | | | |
|---|---|---|---|
| | | | ஏற்பட்ட சமரசம் – அசல் |
| 12 | பி.வா.சா.ஆ.12 | -- | பல்வேறு தேதிகளில் 2ம் பிரதிவாதி ராஜீவ்காந்தி என்பவர் ஊராட்சிக்கு செலுத்திய வீட்டு வரி ரசீது, சொத்து வரி ரசீது, குடிநீர் கட்டண ரசீது எண்ணிக்கை – 7 – அசல் |
| 13 | பி.வா.சா.ஆ.13 | -- | பல்வேறு தேதிகளில் 2ம் பிரதிவாதி ராஜீவ்காந்தி என்பவர் மின் கட்டணம் செலுத்தியதற்கான ரசீது எண்ணிக்கை – 6 – அசல் |

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2026.07.14 17:22:09 +0100

சார்பு நீதிபதி,
திருவாரூர்.